# தில்லி IIT - அபுதாபி வளாகத்தில் முதல் தொகுதி மாணவர்களுடன் பாரத பிரதமரின் கலந்துரையாடல்

பிப்ரவரி 13, 2024

தில்லி IIT - அபுதாபி வளாகத்தில் முதல் தொகுதி மாணவர்களுடன் பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் கலந்துரையாடினார். இது இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குவது மட்டுமல்லாமல், இரு நாடுகளின் இளைஞர்களையும் ஒன்றிணைக்கிறது என்றும் பிரதமர் கூறினார்.

பிப்ரவரி 2022 இல் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள தில்லி இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT-D) வளாகத்தை திறக்க இரு நாடுகளின் தலைமைகளும் திட்டமிட்டிருந்தன. தில்லி இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT-D) மற்றும் அபுதாபி கல்வி மற்றும் அறிவுத் துறை (ADEK) ஆகியவற்றின் கூட்டு ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டம், உலகெங்கிலும் உள்ள மாணவர்களுக்கு தரமான உயர்கல்வி வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அடுத்த தலைமுறை தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மைகளை ஊக்குவிக்கும். மேலும், முதல் கல்வித் திட்டம் - எரிசக்தி மாற்றம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் முதுகலைப் பட்டமானது, இந்த ஜனவரியில் தொடங்கியது.

**அபுதாபி**
**பிப்ரவரி 13, 2024**